අත්‍යවශ්‍ය සේවා කොමසාරිස් ජනරාල් කාර්යාලය
அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம்
OFFICE OF THE COMMISSIONER GENERAL OF ESSENTIAL SERVICES

2025-நவம்பர்-30 : இரவு 10.30 மணி

# ஊடக அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.11.28 திகதியிடப்பட்ட 2464/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின்படி நியமிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அதிகாரத்தின் பிரகாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை மீட்டெடுப்பதற்குத் தேவையான துரித நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் கீழ், அனைத்து மாகாண பிரதம செயலாளர்களுக்கும் அந்தந்த மாகாணங்களில் உள்ள உட்கட்டமைப்பிற்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிட்டு உடனடியாக எனக்குத் தெரிவிக்குமாறும், உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைளை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது. விசேடமாக, ஒரு மாகாண சபைக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்தின் உபகரணங்கள் மற்றும் மனித வளங்களை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மற்றொரு மாகாண சபைக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதற்குத் தேவையான அதிகாரத்தை நான் மாகாண பிரதானிகளுக்கு வழங்கியுள்ளேன்.

மேலும், உரிய மக்களுக்கு அனர்த்த நிவாரண சேவைகளைத் துரிதமாக வழங்குவது தொடர்பான பிரச்சினைகள் மாவட்ட செயலாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கும் துரித தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்று 3955 மெற்றிக் தொன் அளவிலான LP எரிவாயுக் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தில் இறக்க முடியாமையினால், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இறக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், புத்தளம் மாவட்டத்தின் மாவட்ட செயலாளருக்கு, சிலாபம் லங்கா சதொச களஞ்சியசாலையைத் திறந்து அதில் உள்ள உணவுப் பொருட்களை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பாரதூரமான அனர்த்த சூழ்நிலையில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, நீர் மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு அரசாங்க அதிகாரிகள் உச்ச அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என்பதையும், அவர்களுக்குத் தேவையான பலத்தை வழங்கி மக்களின் வாழ்க்கையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தச் சவாலான நேரத்தில் புரிதலுடன் செயற்படும் முழு இலங்கை மக்களுக்கும் எனது மரியாதைக்குரிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பி.கெ.பிரபாத் சந்திரகீர்த்தி**
**அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்**

**Email Address: cg@esgovsl.com**

අංක 150, ආර්.ඒ. ද මෙල් මාවත, කොළඹ 03, ශ්‍රී ලංකාව
எண். 150, ஆர்.ஏ. டி மல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை
No. 150, R.A. De Mal Mawatha, Colombo 03, Sri Lanka